**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தின்மக் கழிவு மத்திய நிலையத்தில் ரூபா 1,296,693 செலவுசெய்து நிர்மாணித்திருந்த கட்டிடங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல மூலதனச் செலவுகளும் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | 2020 கணக்காண்டுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றினூடாக கணக்கீடு செய்வதாக தயவுடன் அறியத் தருகிறேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் 124 கட்டிடங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | சபைக்குச் சொந்தமான சகல காணிகளும் கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | மீண்டும் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய சொத்துக்களின் உண்மையான பெறுமதியை நிதிக் கூற்றினூடாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். |

| | | |
|---|---|---|
| (இ) முனமல்தெனிய வாராந்த சந்தையின் வடிகாண் தொகுதியை அமைப்பதற்குச் செலவான ரூபா 525,019 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | 2020 க்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றினூடாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,570,471 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,339,638 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 |
| i. | வீதவரியும் வரியும் | 4,117 | 3,221 | 3,282 | 35 | 3,724 | 3,381 | 3,512 | 96 |
| ii. | வாடகை | 19,644 | 21,146 | 21,102 | 62 | 22,415 | 20,740 | 20,842 | 18 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,328 | 1,445 | - | - | 1,105 | 1,264 | 1,270 | - |
| iv. | ஏனைய வருமானம் | 123,178 | | 174,630 | 64,262 | 119,365 | 130,182 | 107,765 | 77,058 |
| | மொத்தம் | 148,267 | 157,216 | 199,014 | 64,359 | 146,609 | 155,767 | 133,389 | 77,172 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று | பெற வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு துரிதமாக | மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 5,400,654 ஆகவும் முத்திரைக் |

| | | |
|---|---|---|
| பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 5,400,654 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா. 56,033,658 ஆகவும் இருந்தது. அதில் 2020 யூன் 01 ஆந் திகதி வரை மேலும் ரூபா. 51,033,658 ஆன முத்திரைக் கட்டண வருமானமொன்று கிடைக்க வேண்டியிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கட்டணம் ரூபா. 56,033,658 ஆகவும் காணப்பட்டதாக ஏற்றுக்கொள்கின்றேன். ரூபா. 51,033,658 ஆன முத்திரைக் கட்டணங்கள் மேலும் கிடைக்க வேண்டியிருந்தது. இது சபைக்கு கட்டுப்படுத்த முடியாத நிலைமையொன்றில் இருப்பதாக அறிய தருகின்றேன். |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தில் 126 வது பிரிவின் கீழ் 30 அம்சங்களை நிறைவேற்று வதற்கு உப விதிகளை விதிக்க வேண்டியிருப்பினும் மீளாய்வு ஆண்டின் ரோகும்போது 09 அம்சங்களுக்கு மாத்திரமே உப விதிகள் விதிக்கப் பட்டிருந்தன. | விதிக்கப்பட்ட மற்றும், ஏற்றுக்கொள்ளப்பட்ட உப விதிகளின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், தேவையைப் பொருத்து புதிதாக உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது காணப்படும் தேவையின் அடிப்படையில் இனங்காணப்பட்ட 02 விடயப்பரப்புக்களை தழுவும் விதமாக 02 உப விதிகள் சட்டமூலமாக்கப்பட்டுள்ளதுடன், ஒரு சட்டமூலம் அதன் நம்பகத்தன்மையை உறுதிசெய்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக பிரதான அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) பாதீட்டு செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 5,025,955 பெறுமதியான | பாதீட்டைக் கொண்ட | இக்கருத்திட்டங்களுக்காக செலவு மதிப்பீடுகள் |

| | | |
|---|---|---|
| பாதீட்டைக் கொண்ட 17 கைத்தொழில்கள் நிறைவேற்றப்படவில்லை | கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தயாரிக்கபட்டிருந்தாலும் அதிக மழை, மூலப்பொருட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டில் அதனை நிறைவேற்ற முடியாமல் போனது என தயவுடன் அறியத்தருகிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் சதொச இயங்கிவரும் கட்டடத்துக்காக ஒக்டோபர் மாதத்திலிருந்து மாதாந்தக் கூலியாக ரூபா 70,000 அறவிடப்பட வேண்டியிருந்தும் மாதாந்தம் ரூபா 60,000 வீதம் அறவீடு செய்தமையால் மீளாய்வாண்டில் 3 மாதங்களுக்காக ரூபா 30,000 நட்டம் ஏற்பட்டது. | குறித்த வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளதன்படி ரூபா 70,000 மாத வாடகை தொடர்பாக 2019.11.05 மற்றும் 2019.12.02 திகதிய கடிதங்களின் மூலம் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள் மற்றும் தற்போது காணப்படும் நிலைமையினையும் கருத்திற்கொண்டு குறித்த வாடகை மதிப்பீட்டு அறிக்கைத் திருத்தம் கிடைக்கும் வரை பழைய வாடகையை அறவீடு செய்தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பல்நோக்கு கட்டிடத்துக்கு சொந்தமான 04 கடைகள் மீளாய்வாண்டில் மூடப்பட்டிருந்தமையால் ரூபா 1,053,000 வருமான இழப்பு ஏற்பட்டது. | கடைகளை விலைமனு கோரலின் அடிப்படையில் வழங்கி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடைகள் வாடகைக் காரர்களினால் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தாலும், கடைகள் நட்டத்தில் இயங்குவதால் அவற்றை நடாத்திச் செல்ல முடியாது எனக் குறிப்பிட்டு கடைகளை சபைக்கு மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 திசெம்பர் 31 அந்திகதிக்கு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா | வருடத்துக்கான சிட்டையிடப்பட்டவற்றுக்கு | நிலுவை ஆதனவரி ஏக்கர் வரி மற்றும் நீர் வரி ஆகியவற்றை அறவீடு |

| | | |
|---|---|---|
| 72,045,032 ஆக இருப்பினும் அதில் ரூபா 10,187,613 ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் நிலுவையாக காணப்பட்டது. | அவ்வருடத்தினுள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் மேலும் மூலதன உதவியாகக் கிடைக்க வேண்டிய மொத்தப்பெறுமதியான ரூபா 1,681,871.65ஐ எதிர்வரும் காலங்களில அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நீதிமன்ற தண்டப்பணத் தொகையாக ரூபா 5,400,654ம் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 51,033,658ம் கிடைக்க வேண்டியுள்ளது என தெரிவிப்பதோடு இந்நிலைமையை சபையினால் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாகவும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஈ) 2019 தெசெம்ப் 31 ஆந்திகதிக்கு ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக செலுத்தப்படாமல் இருக்கும் நிலுவைத்தொகை ரூபா 13,316,301 ஆக இருந்ததுடன், அதில் 05 வருடத்துக்கும் மேற்பட்ட நானாவித வைப்பீட்டு நிலுவைத் தொகை ரூபா 363,948 ஆகும். | செலுத்த வேண்டிய தொகையை செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | மேலும் செலுத்த வேண்டிய தொகையை சீக்கிமாக செலுத்தி முடிப்பதாக தயவுடன் தெரிவித்துக கொள்கிறேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஆளணி வெற்றிடம் மற்றும் மிகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடைநிலை மற்றும் ஆரம்ப தர சேவைகளுக்கு 19 பதவி வெற்றிடங்களும் 08 மிகையும் காணப்பட்டதுடன், ஒப்பந்த அடிப்படையில் 18 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களுக்கு சேர்த்துக்கொள்வதற்கும், மேலதிக அளணிக்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கும் | மிகையான பதவிகளுக்கு அனுமதி பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் ஒப்பந்தக்காலத்தை 06 மாதங்களுக்கு ஒரு தடவை |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீடிப்பதன் அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியின் பிரகாரம் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகிறேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

----------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டின் இறுதியில் காலம் குறித்தொதுக்க முடியாத ரூபா 333,038 பெறுமதியான 19 கடன் நிலுவைகளும், 01 தொடக்கம் 02 வருட காலப்பகுதிக்கு உரித்தான ரூ8,151 பெறுமதியான இரண்டு நிலுவைகளும் காணப்படுகின்றன. | நிலுவை கடன்மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஒரு நிலுவைக் கடன் தொகையை ஓய்வூதிய பணிக்கொடைக் கொடுப்பனவிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை குழுவொன்றினூடாக எதிர்கால வேலைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகிறேன். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஆதனவரி சொத்து மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | குறித்த அதிகாரப் பிரதேசத்தை உள்ளடக்கிய தேச வரைபடம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்த பின்னர் புதிய ஆதனவரி மதிப்பீட்டை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இங்கு அறியத்தருகிறேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) 32 வருட காலமாக ஒப்பந்தம் எதுவுமின்றி 04 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 12 கடைகள் 03 மாதம் தொடக்கம் 02 வருடங்களும் 04 மாத காலமாக ஒப்பந்தங்கள் எதுவுமின்றி இருந்தன. | முறைப்படியான ஒப்பந்தத்தின் மூலம சபையின் சொத்துக்கள் வாடகைக்கு வழங்கப்படுவதுடன், ஒப்பந்தங்கள் காலத்துக்கு ஏற்றவிதமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓப்பந்தங்களை கைச்சாத்திடுவது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்தியிருப்பினும், ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 134 மயானபூமிகள் கையேற்கப்படாமல் உள்ளன. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நில அளவை திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் 08 மயான பூமிகள் அளவை மேற்கொள்ளப்பட்டு எல்லைக் கற்கள் இட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இம்மயான பூமிகளை கையேற்பது தொடர்பாக ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தயவுடன் அறித்தருகிறேன். |

**3.5.2 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவி எல வாராந்த சந்தை 2018லிருந்து செயலற்றுப்போய் இருப்பதனால் அங்குள்ள கட்டிடங்களும் இணைப்புகளும் அழிவடைந்து காணப்பட்டன. | சபைக்குச் சொந்தமான விளைவற்ற சொத்துக்களை கண்டறிந்து விளைதிறனான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவிஎல வாராந்த சந்தை கணக்காய்வுச் சோதனையின்போது செயலற்றுக் காணப்பட்டமையினால் புற்பூண்டுகள் முளைத்திருந்ததாகவும், கட்டடங்களில் பூட்டப்பட்டிருந்த மின் குமிழ்கள், மின் உபகரணங்கள் மற்றும் பாகங்கள் இன்றி காணப்பட்டதை ஏற்றுக் கொள்கிறேன். வடமேல் மாகாண முதலமைச்சரின் ஒதுக்கீட்டு நிதியிலிந்து நிர்மாணிக்கப்பட்ட மாவி எல வாராந்த சந்தை சகல வசதிகளையும் கொண்டதாகும். |